Register No. | | | | | | | | |

**FA8A**

**5111–22**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

**B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.**

(Five-year Regular Course)

Fourth Year – Eighth Semester

**INTERPRETATION OF STATUTES**

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours | Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the principles that govern the construction of statutes.

   செய்சட்டக் கட்டுமானங்கள் குறித்த கோட்பாடுகளை விளக்குக.

2. "The provisions of the General Clauses Act, 1897 is the basis for all laws." – Comment.

   "பொது வகைய சட்டப் பிரிவுகள் எல்லா சட்டங்களின் அடிப்படை" - விமர்சிக்க.

3. Explain the principles of a Harmonious Construction with reference to decided cases.

   தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் மேற்கோளுடன் ஒத்திசைவு பொருள் கொளல் கோட்பாட்டினை விளக்குக.

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. "If there are two reasonable constructions, we must give effect to the more lenient one". Explain with reference to penal statues.

   "இரண்டு நேரிய பொருள் விளக்கம் இருக்குமேயாயின் அவைகளில் கண்டிப்பு குறைவான ஒன்றையே பொருள் கொள்ள வேண்டும்". இது தண்டனைச் சட்டங்களுக்கு பொருந்துமா என்பதை விளக்குக.

5. State the differences between a "consolidating statute" and a "codifying statute".

''தொகுப்பு சட்டத்திற்கும்'', ''இணைப்புச் சட்டத்திற்கும்'' உள்ள வேறுபாடுகளைக் கூறுக.

6. Explain how the doctrine of pith and substance is used as a tool to interpret the Indian Constitution.

இந்திய அரசமைப்புச் சட்டத்தினை பொருள் விளக்கம் காணும் கருவியாக ''மையக் கருப்பொருள் கோட்பாடு'' எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்குக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following :**

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Rule in Heydon's case.
ஹேடன் வழக்கின் விதி.

(b) Ut res magis valeat quam pereat.
ஒரு விசயத்தை இல்லா நிலையாக்குவதை விட செயலாக்கம் கொடுப்பதே நன்று.

(c) Marginal notes.
ஓரக் குறிப்புக்கள்.

(d) Non-obstante clause.
''எது எவ்வாறிருப்பினும்'' என்ற வகையம்.

(e) Doctrine of prospective overruling.
முன்மேவு மறுதளிக்கும் கோட்பாடு.

(f) Doctrine of Colourable legislation.
முறையது போன்ற சட்டம்.

(g) Effect of Repeal.
சட்டரத்தின் விளைவுகள்.

## PART D — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Bihar State Legislature made a law restricting the use of sound amplifiers. The law was challenged on the ground that the subject falls under List-I. The State contended that the law was within the legislative competence of List II. Decide.

ஒலி பெருக்கியை பயன்படுத்துவதில் கட்டுப்பாடுகள் விதித்து பீகார் மாநில சட்டமன்றம் சட்டம் இயற்றியது. இச்சட்டம் மத்தியப் பட்டியலில் உள்ளதால் மாநில அரசிற்கு சட்டம் இயற்றும் அதிகாரம் இல்லை என எதிர்வாதிட்டது. மாநில அரசோ இது பட்டியல் II-ல் வரும் என மறுப்புரை செய்தது. தீர்மானிக்க.

9. The Passport of Rajesh was cancelled by a Passport officer without assigning any reason for his action under Section 10(c) of the Passport Act. Rajesh challenged the action as unconstitutional and violative of his fundamental rights. Decide.

பிரிவு 10(c) கடவுச் சீட்டு சட்டப்படி கடவுச்சீட்டு அதிகாரியால் எந்த காரணமும் கூறாமல் ராஜேஷ் என்பவரது கடவுச் சீட்டு நீக்கம் செய்யப்படுகிறது. அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானது என்றும் கீழ் தனது அடிப்படை உரிமை பாதிக்கப்படுவதால் இது செல்லாது என்றும் ராஜேஷ் வழக்கிடுகிறார். தீர்மானிக்க.

10. Prakash was directed to file written statement in City Civil Court within a period of 30 days. Prakash filed the written statement on the day next to 30th day since the Court closed on that day. Whether the written statement was filed within time? Discuss it with reference to computation of time under Section 10 of General Clauses Act, 1897.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒன்றில் பிரகாஷ் என்பவர் எதிருரை தாக்கல் செய்ய 30 நாட்கள் கால அவகாசம் கொடுக்கப்பட்டார். அந்த 30வது நாள் முடிவுறும் அன்று நீதிமன்றம் இயங்கவில்லை என்பதால் பிரகாஷ் தன்னுடைய எதிர் உரையை அதற்கு அடுத்த நாள் தாக்கல் செய்தார். எதிர் உரை உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? இதனை பொது வகையச் சட்டம் 1897-ன் கீழ் காலத்தை கணக்கிடுதல் பற்றி உள்ள பிரிவு 10-ஐ மேற்கோள் காட்டி விளக்குக.

---

Register No. | | | | | | | | |

5112–22

**FA8B**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

## B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Five-year Regular Course)

Fourth Year – Eighth Semester

**LAND LAWS**

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

**PART A — (2 × 12 = 24 marks)**

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss how Zamin and Inam systems of land holdings failed and led to the conversion of Ryotwari system of land holding in Tamil Nadu.
தமிழ்நாட்டில் ஜமீன் மற்றும் இனாம் நிலவுடைமை முறைகள் எவ்வாறு தோல்வியடைந்தன என்பதையும் அவை எவ்வாறு இரயுத்துவாரி நிலவுடைமை முறைக்கு வழிவகுத்தன என்பதையும் விவாதிக்கவும்.

2. Give the reasons for the insertion of Articles 31-A, 31-B and 31-C into the Indian Constitution.
ஷரத்துக்கள் 31-A, 31-B மற்றும் 31-C ஆகியவற்றை இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடைச் சேர்ப்புச் செய்ததற்கான காரணங்களைக் கூறுக.

3. Explain the urgent situations under which land can be acquired without much formalities under the Land Acquisition and Rehabilitation Act of 2013.
2013-ஆம் ஆண்டின் நிலம் கையகப்படுத்துதல் மற்றும் மறுவாழ்வளித்தல் சட்டத்தின் கீழ் அவசர சூழ்நிலைகளுக்காக எவ்வாறு எளிதாக நிலத்தைக் கையகப்படுத்தலாம்?

**PART B — (2 × 7 = 14 marks)**

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the Power of Revision by the High Court with case laws under the 1955 Act and other Acts.
உயர்நீதி மன்றத்தின் மறு ஆய்வு அதிகாரம் பற்றி 1955-ஆம் ஆண்டுச் சட்டம் மற்றும் இதர சட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ளவாறு விளக்குக.

5. Explain 'Kudiyiruppu' and bring out the provisions about its transfer.
'குடியிருப்பை' விளக்கு. அதனை மாற்றியளிப்பது பற்றிய வகையங்களை வெளிக்கொணர்க.

6. What are the 'obligations of the landlord and tenant' under the Tamil Nadu Regulations of Rights and Responsibilities of Landlords and Tenants Act 2017?
2017 ஆம் ஆண்டின் கட்டிட உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்கள் ஆகியோரின் உரிமைகளையும் பொறுப்புகளையும் ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின்கீழ் 'கட்டிட உரிமையாளர் மற்றும் குத்தகைதாரர் ஆகியோரின் கடப்பாடுகளாக' கூறப்பட்டுள்ளவை யாவை?

## PART C — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following :**
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Permanent settlement.
நிரந்தர நிலவரித் திட்டம்.

(b) Grounds of eviction of a cultivating tenant.
ஒரு பயிரிடும் குத்தகைதாரரை வெளியேற்றுவதற்கான காரணங்கள்.

(c) Rent Court and Rent Tribunal.
குத்தகை நீதிமன்றம் மற்றும் குத்தகைத் தீர்ப்பாயம்.

(d) The Tamil Nadu Cultivating Tenants Arrears of Rent (Relief) Act 1972.
1972-ஆம் ஆண்டின் தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் குத்தகைப் பாக்கி (நிவாரணச்) சட்டம்.

(e) Land Board.
நில வாரியம்.

(f) Lands to which Ceiling Act will not apply.
நில உச்சவரம்புச் சட்டம் பொருந்தாத நிலங்கள்.

(g) Approved Record of Tenancy Rights.
ஏற்றுக் கொள்ளப்பட்ட குத்தகை உரிமைகள் பதிவுரு.

## PART D — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons:**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்:

8. A person represented before the Revenue Divisional Officer or Revenue Court that at the time of cultivation as he is keeping accounts, distributing wages and supervising his leasehold land he should be declared to be a cultivating tenant. Can he be declared so? Why?

ஒரு நபர் வருவாய் நீதிமன்றத்தின் முன் தான் குத்தகைக்கு எடுத்த நிலத்தில் பயிரிடும்போது கணக்குகளைப் பராமரித்தும், கூலியைப் பிரித்தளித்தும், மேற்பார்வையிட்டும் வருவதால், தன்னைப் பயிரிடும் குத்தகைதாரராக அறிவிக்க வேண்டுமென கோருகிறார்? அவ்வாறு அறிவிக்க முடியுமா? ஏன்?

9. 'A' possesses 8 acres of wet land for which the land revenue assessment is Rs.15 per acre and above. How many standard acres he possesses? How many acres are in excess according to the provisions of the Ceiling Act?

'A' என்பவர் ஒரு ஏக்கருக்கு ரூ.15 மற்றும் அதற்கும் மேல் என்ற அளவில் நிலவரி மதிப்பீடு கொண்ட எட்டு ஏக்கர் நிலத்தைக் கொண்டிருந்தார். நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் A எத்தனை தரநிலை ஏக்கர்களைக் கொண்டுள்ளார்? எத்தனை ஏக்கர் நிலம் மிகைநிலமாக அறிவிக்கப்படலாம்?

10. 'X' created tenancy over his land in favour of 'Y'. 'Y' the tenant cultivated paddy as main crop. 'X' wanted to have paddy instead of money as his fair rent. Can 'X' claim that? Answer.

'X' என்பவர் 'Y'-க்கு தனது நிலத்தைக் குத்தகைக்கு அளித்தார். 'Y' நெல்லை முக்கிய பயிராக பயிரிட்டார். 'X' நியாய வாடகையைப் பணமாகப் பெறுவதற்கு பதிலாக நெல்லாக பெற விரும்பினார். அவர் அவ்வாறு கோரலாமா? விடையளி.

---

Register No. | | | | | | | | |

**FA8C**

5216–22

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, JUNE 2022.

(Five - year Regular Course)

Fourth Year – Eighth Semester

INTERNATIONAL LAW

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
07 SEP 2022
LIBRARY

Time : 2½ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain "Custom" as source of International Law.

   "வழக்காறு" பன்னாட்டுச் சட்டத்தின் மூலாதாரம் என்பதை விளக்கவும்.

2. Explain the theories on relationship between International Law and Municipal Law.

   பன்னாட்டு சட்டம் மற்றும் உள்நாட்டுச் சட்டத்தின் தொடர்புகளை அதன் தொடர்புடைய கோட்பாடுகளை கொண்டு விவரிக்கவும்.

3. Examine the legal effects of recognition and non recognition of a state with decided cases.

   நாட்டொன்றின் அங்கீகாரம் மற்றும் அங்கீகாரம் இன்மையினால் ஏற்படும் சட்ட விளைவுகளைப் பற்றி முடிவு செய்யப்பட்ட வழக்குகளோடு ஆராய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the salient features of the law of the sea, under the UN Convention on the Law of the Sea, 1982.

   1982–ம் ஆண்டின் கடல்சார் சட்டம் தொடர்புடைய ஐ.நா. சாசனத்தின் கீழ் உள்ள கடல்சார் சட்டத்தின் முக்கிய கூறுகளை விளக்கவும்.

5. Discuss the modes of acquiring and losing of Nationality.

நாட்டுரிமை பெறும் மற்றும் இழக்கும் வழி வகைகளை விவாதிக்க.

6. Examine the scope and jurisdiction of ICJ.

பன்னாட்டு நீதிமன்றத்தின் நோக்கெல்லை மற்றும் ஆள்வரையினை ஆராய்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Jus Cogens

ஜஸ் கோஜன்ஸ்

(b) Diplomatic agent

தூதாண்மையர்

(c) Treaty

சர்வதேச உடன்படிக்கை

(d) Air space

காற்று மண்டலம்

(e) Continental shelf

கண்டத்திட்டு

(f) Delegation Theory

அளிப்படைவு கருத்தியல்

(g) De jure Recognition

சட்டநிலை அங்கீகாரம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Sagar is a shipping vessel with Indian flag on it. In 1970, during the war between Pakistan and India, the warship of Pakistan blockaded south coast of Lakshadeep, which is one of the territory of India. The Pakistan warship also seized the shipping vessel and started proceeding in the court of Pakistan. Decide according to International Law.

சாகர் என்பது ஒரு இந்திய கப்பல். 1970ல் நடந்த இந்தியா–பாகிஸ்தான் போரில் இந்தியாவின் தெற்கு கடல் எல்லையான லட்சத்தீவுகளை பாகிஸ்தான் இராணுவம் முடக்கின. சாகர் கப்பலையும் முடக்கி, பறிமுதல் செய்து பாகிஸ்தான் நாட்டிலுள்ள நீதிமன்றத்தில் நடவடிக்கையிற்காக ஒப்படைத்தனர். இந்நிகழ்விற்கு பன்னாட்டு சட்டம் மூலம் தீர்வு காண்க.

9. Damage was caused to the marble structure in State 'A' by the fumes of sulphur-dioxide emitted from smelter factory in state 'B' territory. Decide the responsibility of State 'B' for the conduct of its smelter factory according to International Law.

'B' நாட்டிலுள்ள உருக்காலை மூலமாக வெளியிடப்பட்ட சல்பர் டையாக்சைடு வாயு மூலமாக 'A' நாட்டின் பிராந்தியத்தில் உள்ள பளிங்கு கட்டமைப்புக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இந்த உருக்கு ஆலை சார்ந்த 'B' நாட்டின் பொறுப்பு பற்றி பன்னாட்டுச் சட்டம் மூலம் தீர்வு காண்க.

10. The State C's exploration ship discovers the oil below the depth of 1500 metres in the seabed at the distance of 120 miles from the Indian coast. India claims that they have the exclusive right to exploit. Is India's claim justified?

'C' நாட்டின் அகழ்வாராய்ச்சி கப்பலானது கடலில் 1500 அடி ஆழத்தில், இந்திய கடல் எல்லைக்கு 120 மைல் அருகில், எண்ணெய் இருப்பதை கண்டறிகிறது. இதை அறிந்த இந்தியா, அந்த எண்ணெயை பயன்படுத்துவதற்கான உரிமை தனக்கு தான் உள்ளது என்று கோருகிறது. இந்தியாவின் கோருதல் நியாயமானதா?

———————